# நண்ணுக நூறாண்டு; நாளையும் நாடாண்டு!





வாலாட்டி வருகின்ற
வடபுலத்து அரசுக்குத்
தாலாட்டுப் பாடாத
தலைவர்கள் வழிவந்த
வேலாட்டத் தளபதி
வெல்கின்ற களபதி
கோலாட்டக் குரிசிலே
கொண்டாடி
வாழ்த்துவோம்!

பாலாற்றுக் காஞ்சியில்
பயின்றெழுந்த அண்ணாவின்
சேலாட்டக் காவிரிபாய்
திருவாரூர்க் கலைஞரின்
நூலாட்ட ஈரோட்டு
நுண்ணறிவுப் பெரியாரின்
காலொற்றி வருபவரே,
கழகத்தின் தலைவரே!
நாலெட்டுத் திசைபோற்றும்
நாயகரே, தங்களின்
மேலான பிறந்தநாள்
மிளிர்கின்ற சிறந்தநாள்!

நீலவான் போல்விரிந்து
நெடுங்கடல் போல்பரந்து
ஆலமரம் போல்படர்ந்து
ஆதவன் போல்ஒளிர்ந்து
கோலநிலா போல்குளிர்ந்து
கொடைக்காற்றுப் போல்வளர்ந்து
காலமெலாம் நிலைக்கவே
கழகந்தான் காக்கவே
சாலமிக வாழ்கவே;
தன்மானம் வளர்கவே!

தொடுத்தபோர் அனைத்திலும்
துவளாத வெற்றியைக்
கொடுத்தவன் கரிகாலன்,
கொடுமுடி இமயத்தில்
விடுத்தவன் புலிக்கொடி
வென்றவன் வடபுலம்!
தடுத்தவர் வீழ்ந்தனர்;
தாள்பணிந்து வணங்கினர்!
எடுத்தவாள் எப்போதும்
எதிரிகளை வீழ்த்தினாற் போல்
படுத்தவர் உம்மாலே
பலபோர்கள்; தேர்தலில்
அடுத்தவர் உமைவெல்லல்
ஆகாமல் அரசியலை
விடுத்தவர் பலராக
வெற்றித்தேர் விரைபவரே!

இந்திமொழித் திணிப்பிங்கே
இம்மியும் இல்லாமல்
அந்தநாள் முதலாக
அயராமல் எதிர்க்கின்ற
செந்தமிழ் நாட்டினை,
திராவிட இனத்தினை
வந்தவர் ஆரியர்
வஞ்சக வலைமீட்ட
சந்ததியில் வந்தவரே!
தளபதியே, தங்களின்
சிந்தனையில் பிறந்தபல
சீரான திட்டங்கள்
தந்தின்று முன்னிலையில்
தமிழ்நாட்டை உயர்த்துகையில்

மந்தரைபோல் சகுனிபோல்
மனங்கெட்ட பேர்வழிகள்
தொந்தரவு செய்தாலும்
சூழ்ச்சிவலை விரித்தாலும்
சந்துவழி புகுவோர்கள்
சங்கடங்கள் புரிந்தாலும்
முந்துவீர், எப்போதும்
முதல்வராய்
முழங்குவீர்!

பந்தாடத் துடிக்கின்ற
பண்பிலா ஒன்றியத்தின்
தந்திரங்கள் பலிக்காமல்
சமரின்றித் தடுக்கின்றீர்!
மந்திரங்கள்
மாயங்கள்
மடமைகள் இல்லாமல்
சொந்தவழி செல்கின்ற
துணிச்சலுடன்
எழுகின்றீர்!

நந்தவனத் தோட்டத்து
நறுமலர்கள் சூட்டுவோம்,
சந்தனம் கூட்டுவோம்,
தமிழிசை மீட்டுவோம்
சிந்துகள் பாடுவோம்,
சிலம்பிசைத்து ஆடுவோம்!
வந்ததொரு பிறந்தநாள்
வளர்கவென வாழ்த்துவோம்!

மும்மொழிக் கொள்கையை
முற்றிலும் முறியடிக்கும்
செம்மொழி கண்டவர்
செல்வரே; ஒருநாளும்
தம்மொழி இழப்பவர் தலைதூக்கல்
இயலாது;

இம்மாநிலத்திற்கு
இருமொழிக் கொள்கையே
செம்மையாம் என அண்ணா
தீட்டிய சட்டத்தைத்
தம்பிகள் காத்திடுவர்;
தமிழையே போற்றிடுவர்
நம்பிக்கை யுடன்அண்ணா
நவின்றதில் உறுதியாய்



பேராசிரியர்
மா.செல்வராசன்

வெம்பகை வந்தாலும்
வெற்றியுடன்
முடிக்கின்ற
சிம்மமாய், சிம்புள்ளாய்ச்
சிறகடித்துத் திகழ்கின்ற
பெம்மானாம் தளபதியார்
பெருமிதப் பிறந்தநாள்
கொம்பூதி வரவேற்போம்;
கொண்டாடி வாழ்த்துவோம்!

கார்முகில் உம்முடைய
கட்டளைக்கு இணங்கியே
நீர்மழை பொழிகிறது,
நிறைந்தெங்கும் வழிகிறது,
ஊர்தோறும் பசுமைதான்
ஓங்கியே திகழ்கிறது,
சீர்கொண்டு நிலமெலாம்
செழிப்பிலே திளைக்கிறது;
ஏர்கொண்ட உழவரின்
இல்லமோ களிக்கிறது,
பார்கண்ட தொழிற்சாலை பற்பல
எழுகிறது,

யார்என்றும் பாராமல்
யாவர்க்கும் பயனாக
நேர்கொண்ட ஆட்சியில்
நிதம்பல புதுமைகள்
பார்கண்டு வியக்கிறது;
பாராட்டி மகிழ்கிறது!

வேர்கொண்ட கழகத்தின்
வெற்றிமிகு தலைவராய்ப்
போர்வழிப் பெரியாரின்
புதுவழி கண்டவர்
பேரறிஞர் அண்ணாவின்
பேராற்றல் கலைஞரின்
சீர்வழி செல்கின்றீர்,
செயலாலே வெல்கின்றீர்,
ஓர்மொழி சொல்கின்றீர்
உங்களில் ஒருவனெனப்
பேர்பெற்றீர்; மக்களிடம்
பெரும்புகழ் பெறுகின்றீர்!
தேர்பெற்ற வேந்தன்போல்
செந்தமிழ்ப் புலவன்போல்
நீர்உயர்ந்தீர், பிறந்தநாள்
நிறைந்துநூறு
ஆகுகவே;
கூர்மதி விளங்கவே
குவலயம் ஆள்கவே!

தண்காவிரி வற்றாமல்
தண்ணீராய்ப் பெருகுதல்போல்
பண்ணிசை நற்றமிழ்ப் பாட்டாகப்
பரவுதல்போல்
ஒண்கதிர் வைகலும்
உலகெலாம் ஒளிர்தல்போல்
வெண்மதி காரிருள்
விளக்காக விளங்குதல்போல்
விண்வெளி எங்கெங்கும்
விரவியே விரிதல்போல்
மண்ணுலவும் உயிர்க்காற்று
மல்கியே வளர்தல்போல்
வண்கடல் மேன்மேலும்
வழிந்துயர்ந்து மிகுதல்போல்

கண்ணியம் நற்கடமை
கட்டுப்பாடு என்கின்ற
அண்ணாவின் கட்டளைகள்
அன்றாடம் இலகல்போல்
திண்மையாய் என்றென்றும்
திராவிடமாய்த் திகழ்கவே!
வண்மைகள் தமிழ்நாட்டில்
வளர்ந்தோங்க ஆள்கவே!

உண்மையில் நீர்ஒரு
ஒப்பற்ற தலைவராம்;
எண்ணிடில்
என்றும்நீர்
இணையிலா முதல்வராம்;
தொண்டெனில் என்றுமே
துவளாத இளைஞராம்;
கண்டபல தலைவருள்
கதிரவன் நீரேதாம்!
விண்டபடி செய்கின்ற
விழுமியர் நீரன்றோ!

பெண்ணரசி துர்காவின்
பெருந்துண இனிமையுடன்
நண்ணுக நூறாண்டு;
நாளையும் நாடாண்டு!



தமிழக முதல்வர் அவர்களின் 72 வது பிறந்தநாள் முன்னிட்டு மாவட்டச் செயலாளர் தளபதி எம்.எல்.ஏ., மற்றும் அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சிம்மக்கல் பகுதி 51 வட்டம் சார்பாக வட்டச் செயலாளர் அசோக்குமார் தலைமையில் முதியோர் இல்லத்தில் காலை மதியம் இரவு உணவு வழங்கப்பட்டது. மாமன்ற உறுப்பினர் விஜயலட்சுமி கண்ணன் துவங்கி வைத்தார். இதில் சிம்மக்கல் பகுதிச் செயலாளர் சரவண பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் p.t. மணிமாறன், வெள்ள துரை, கணபதி, ராம்குமார், குமரன், ராஜம், இளங்கோ, தர்மராஜன், விஸ்வநாதன், கார்த்திக், நடராஜன், கிருஷ்ணமூர்த்தி, இளைஞர் அணி மணிகண்டன், கணேசன், முருகேசன், வெங்கடேசன், பூசாரி கணேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்



திருப்புவனம் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு ஒன்றிய செயலாளர் வசந்திசேங்கைமாறன் தலைமையில் மாவட்டக் கழக துணைச் செயலாளர் திருப்புவனம் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கைமாறன் பொதுமக்களுக்கு இனிப்புகள் மற்றும் வேட்டி, போர்வைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பேரூர் கழக செயலாளர் நாகூர்கனி, பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ரகமத்துல்லாகான், மாவட்ட விவசாய துணைத் தலைவர் சேகர், முன்னாள் யூனியன் துணை சேர்மன் மூர்த்தி, ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் தேவதாஸ், அறிவுக்கரசு, மாவட்ட பிரதிநிதிகள் ராமலிங்கம், ஈஸ்வரன், சுப்பையா, வெங்கடேசன், பாலகிருஷ்ணன், ஒன்றிய நிர்வாகிகள் ரவி, சக்திமுருகன், இளங்கோவன், மகேந்திரன், ராமு, மீனாட்சி சுந்தரம், தேளிகோபால், மாவட்ட தொழிலாளர் துணை அமைப்பாளர் மணிகண்டன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர் ராஜா, நகர் இளைஞரணி அமைப்பாளர் கண்ணன், ஒன்றிய மாணவரணி அமைப்பாளர்கள் காளிதாஸ், பாண்டியர் கிருஷ்ணன், கிளை கழக நிர்வாகிகள், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள்.